1973 மார்ச் 5] [திரு. என். கே. பழனிசாமி]

நன்றி தெரிவித்து விட்டு, இதற்கு மாற்றுந்தாய் மனப்பான்மை என்று சொல்வது கூடாது. நாம் அதிகமாகக் கேட்டோம், அவர்கள் ஒதுக்கவில்லை, இருப்பினும் நாம் அதிகமாகச் செலவழிக்கிறோம் என்று காட்டி, மத்திய சர்க்கார் மாநில வளர்ச்சிக்குத் தடங்கலாக இருக்கிறது என்று காண்பிப்பது, அதுவும் ஒன்றுக்கு ஒன்று கம்பேர் செய்வது என்பது இந்த அரசின் அடிப்படை நோக்கமாக இருக்கிறது.

என்.ஜி.ஓக்களுக்கு ரூ. 10 கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே விலைவாசி ஏறி இருக்கக்கூடிய நேரத்தில் இந்த ரூ. 10 கையில் கொடுக்காமல் அந்தப் பணத்தை பி.எப்.பில் சேர்த்து இருக்கிறார்கள் என்றால், என்.ஜி.ஓக்கள் மாதாமாதம் அந்தப் பணத்தை பாங்கில் போடுகிறார்கள் என்று அர்த்தம். இந்தச் சபையில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது, மத்திய சர்க்கார் சிப்பந்திகளுக்கு எந்த அளவுக்குப் பஞ்சப்படி கொடுக்கப் படுகிறதோ அந்த அளவுக்கு மாநில அரசு சிப்பந்திகளுக்கும் கொடுக்கப்படும் என்று. அந்த அடிப்படையில் இது என்ன இடைக்கால நிவாரணமா அல்லது இவ்வளவுதானா என்பது சொல்லப்படவில்லை.

வீட்டு வாடகைப்படி ஏற்கனவே சர்க்கார் 12 சதவிகிதம் கொடுத்து வருகிறார்கள். இப்போது 3 சதவிகிதம் தான் அதிகரித்து இருக்கிறார்கள். இன்றையதினம் வீட்டு வாடகை அதிகமாக இருக்கும் நேரத்தில்—மற்ற மாவட்டங்களில் எடுத்துக் கொண்டாலும் அங்கேயும் அதிகமாக இருக்கிறது—சென்னை நகருக்கு மட்டும் இந்த நிலைமையில்லாமல் மற்ற வட்டங்களுக்கும் இந்த வசதி தரப்படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடியிருப்பு மனைகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வாங்கித் தருவதற்காகப் பணம் ஒதுக்கியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த மனைகளில் இருப்பவர்கள் 30-35 வருடம் இருக்கிறார்கள். நிலப்பிரபுக்கள் போய் ஒன்றும் செய்ய முடியாது. இந்த நிலையில் சர்க்கார் தனியாக அவர்களுக்குப் பணம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலச்சீர்திருத்தச் சட்டம் ஒன்று கொண்டுவரப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. குத்தகைதாரர்களுக்கு பர்சேசிங் ரைட்தான் இருக்கிறது, ஆக்குபென்ஸிரைட்ஸ் கிடையாது என்ற

முறையில் இருக்கிறது. பர்சேசிஸ் ரைட் என்று சொன்னால், குத்தகைதாரர்கள் விற்கவேண்டுமென்று இருக்கிறதே தவிர மற்றவர்களுக்கு விற்கக்கூடாது என்பது சாராம்சம்.

மு.ப. 10–00 **மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** ஆக்குபன்ட்ஸ் ரைட்டுக்கும், டெனன்ட்ஸ் ரைட்டுக்கும் உள்ள வித்தியாசத்தைத் தெரிந்துதான் வைத்து இருக்கிறோம். குத்தகைதாரர்களுக்கு நிலத்தை வாங்கும் உரிமையைக் கொடுத்திருக்கிறோம். அதற்குத் தடை இல்லை. அதோடு குத்தகைதாரர்களைக் காலி செய்யும் உரிமை யாருக்கும் கிடையாது. நண்பர் பழனிசாமி அவர்கள் இதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

திரு. என். கே. பழனிசாமி: நிலப் பிரபுக்கள் விலைக்கு விற்க முடியாது. . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான் நண்பர் பழனிசாமி அவர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புவது, கொஞ்சம் பொறுத் திருங்கள், அதற்கு எல்லாம் சட்டம் வர இருக்கிறது. அந்தச் சட்டத்தில் எல்லாப் பாதுகாப்பும் செய்யப்பட்டிருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி: மேட்டூர் அலுமினியத் தொழிற் சாலையை சர்க்கார் எடுக்கப் போகிறார்கள். அதுபற்றி மத்திய அரசிடம் அனுமதி கேட்டிருக்கிறார்கள். அனுமதி வந்தபிறகு அந்த நிறுவனத்தை எடுத்துக்கொள்வதாகச் சொல்லியிருக் கிறார்கள். சமீபத்தில் மத்திய அரசாங்கம் நிலக்கரி சுரங்கங்களை எல்லாம் திடீரென்று ஒரு அவசரச் சட்டத்தின் மூலம் எடுத்துக் கொண்டார்கள். அப்படி இருந்தும் அவசரச் சட்டம் வருவதாகத் தெரிந்து, நிலக்கரி சுரங்க சொந்தக்காரர்கள் பாங்கில் இருந்த பணத்தை எல்லாம் எடுத்துவிட்டார்கள். தொழிலாளர்களுக்குச் சரியாகச் சம்பளம் கொடுக்கவில்லை. அதைப் பார்க்கும்போது, தமிழ்நாடு அரசாங்கத்தின் இந்தத் திட்டத்தினால் பயன் ஏற்படாது என்றுதான் தெரிகிறது. மத்திய அரசாங்கத்தின் அனுமதி வருவதற்குள் அந்த அலுமினியத் தொழிற்சாலையில் மிஷினரி கூட இருக்காது. 1954 ஆம் ஆண்டில் இன்டஸ்டிரியல் பாலிசி ரெசலூஷன் ஒன்று போட்டார்கள். அதுமாதிரியான ஒரு ரெசலூஷனைப் போட்டு, ஒரு அவசரச் சட்டத்தைப் பிறப்பித்து,